10/=

Registered as a Newspaper in Srilanka

# எதிரொலி
Ethiroli

குரல் 01 அதிர்வு 142 வியாழக்கிழமை ஒக்ரோபர் 12 2017 ethirolimedia@gmail.com 021 300 48 48



## உணவு விஷமானது
### 200 பேர் பாதிப்பு

கண்டி, ஹாரகம ஆடைத் தொழிற்சாலையில் பணிபுரிந்து வந்த சுமார் 200க்கும் மேற்பட்ட ஊழியர்கள், உணவு ஒவ்வாமை காரணமாக, இன்று காலை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என வைத்தியசாலை வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவர்கள், தொழிற்சாலையில் வழங்கப்பட்ட காலை உணவை உட்கொண்டதன் பின்னரே, இவ்வாறு திடீரென நோய்வாய்ப்பட்டுள்ளனர் என்று தெரியவருகிறது.

இச்சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)



# மானிப்பாய் தமிழிச்சி ஆஸி. கட்சிக்கு தலைவி

ஆஸ்திரேலிய கிறீன் கட்சியின் விக்டோரிய மாநிலக் கிளையின் தலைவராக ஈழத்தைப் பூர்வீகமாகக் கொண்ட தமிழிச்சி சமந்தா ரட்ணம் அந்தக் கட்சியினால் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

இன்று நடைபெற்ற கட்சியின் உயர் மட்டக்கூட்டத்தில் இந்த முடிவெடுக்கப்பட்டதாக கட்சியின் உயர்பீடம் அறிவித்துள்ளது.

கிறீன் கட்சியின் இந்த அறிவிப்பு ஆஸ்திரேலிய அரசியல் மட்டத்திலும்கூட பலத்த அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. கற்றுக்குட்டியை தலைவராக்கியிருக்கிறார்கள் என்ற சாரப்பட சில ஆஸ்திரேலிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. ஆனால், சமந்தா ரட்ணத்தின் ஆளுமை தொடர்பில் தாங்கள் மிகப்பெரிய நம்பிக்கையும் எதிர்பார்ப்பும் கொண்டுள்ளதாக கட்சி பேச்சாளர் இன்று ஊடகங்களுடன் பேசும் போது தெரிவித்திருந்தார்.

06



# வடக்கில் நாளை கடையடைப்பு!

ஆதரவு தரக் கோரிக்கை

தமிழ் அரசியல் கைதிகளுக்கு நீதி கோரி வடக்கு மாகாணத்தில் நாளை மேற்கொள்ளப்படவுள்ள கடையடைப்புக்கு பல்வேறு பொது அமைப்புகள் ஆதரவைத் தெரிவித்துள்ளன. இந்த நிலையில் இந்தக் கடையடைப்பை வெற்றிபெறச் செய்து அரசுக்கு அழுத்தம் கொடுக்க ஒவ்வொரு தமிழரும் முன்வர வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தமது வழக்குகளை மீண்டும் தமிழ் பிரதேச நீதிமன்றங்களுக்கு மாற்ற வேண்டும் என்ற உடனடிக் கோரிக்கையுடனும், அவ்வாறு மாற்றப்பட்ட பின்பு தமது வழக்குகளைத் துரிதமாக விசாரித்து முடிவு காண வேண்டுமென வலியுறுத்தியும் அநுராதபுரம் சிறைச்சாலையில் சாகும்வரை உணவுத் தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வரும் மூன்று அரசியல் கைதிகளின் கோரிக்கைகளை இழுத்தடிக்காது உடனடியாக நிறைவேற்றுமாறும், அனைத்து தமிழ் அரசியல் கைதிகளை

06

# 6,631
## படைவிட்டோடிகள் கைது



முப்படையிலிருந்து தப்பிச் சென்ற 6 ஆயிரத்து 631 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று இராணுவப் பேச்சாளர், பிரிகேடியர் ரொஷான் செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட படைவிட்டோடிகளில் 13 இராணுவ அதிகாரிகளும் உள்ளடங்குவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

முப்படையிலிருந்து தப்பிச் சென்றோர், உத்தியோகபூர்வமாக விலகிச் செல்வதற்காக பொதுமன்னிப்புக் காலம் வழங்கப்பட்டது. எனினும் அதன்போது

06



## பொலிஸாரின் அசமந்தம்: பொதுமகன் உயிரிழப்பு

போக்குவரத்துப் பொலிஸாரின் அசமந்தத்தால், கிளிநொச்சி ஏ-9 வீதி ஆனையிறவு உமையாள்புரம் பகுதியில்இன்று அதிகாலை இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

குறித்த பகுதியில் நேற்று சாரதியின் தூக்கக் கலக்கத்தால் சொகுசு பஸ் ஒன்று விபத்துக்குள்ளானது. இதில் இருவர் காயமடைந்திருந்திருந்தனர்.

ஆயினும் விபத்துக்குள்ளான பஸ்ஸை போக்குவரத்துப் பொலிஸார் அங்கிருந்து அப்புறப்படுத்தவில்லை. அது விபத்துக்குள்ளான இடத்திலேயே நிறுத்தப்பட்டிருந்தது.

ஆனால் இதனையறியாத ஒருவர் இன்று அதிகாலை கிளிநொச்சியிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணித்தபோது, அவரின் மோட்டார் சைக்கிள் வீதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சொகுசு பஸ்ஸோடு மோதியது. இதனால் மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் சம்பவ இடத்திலேயே பலியானார். பொலிஸார் உடனடியாகவே குறித்த பஸ்ஸை அங்கிருந்து அப்புறப்படுத்தியிருந்தால், அநியாயமாக ஒரு உயிர் பறிக்கப்பட்டிருக்காது என மக்கள் விசனம் வெளியிட்டுள்ளனர். (அ-13)

# அரசியல் கைதிகளை உடனே விடுவிக்குக!

## மைத்திரிக்கு சம்பந்தன் கடுந்தொனியில் அவசரக் கடிதம்



"இலங்கையின் தேசியப் பிரச்சினைக்கு உரிய நேரத்தில் தீர்வு காணப்பட்டிருந்தால், கைதிகளாக உள்ளவர்களில் அனேக மானவர்களுக்கு தற்போதுள்ள நிலைமை ஏற்பட்டிருக்காது. மக்கள் விடுதலை முன்னணியினர் (ஜே.வி.பி) கிளர்ச்சிகளை மேற்கொண்ட வேளையில் கைது செய்யப்பட்டவர்கள் யாவரும் மன்னிப்பளிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டனர். இதேபோன்ற ஒரு கொள்கையை தற்போதுள்ள இந்தக் கைதிகள் விடயத்திலும் செயற்படுத்த முடியாமலிருப்பது ஏன் என்பதை விளங்கிக் கொள்ள முடியாதுள்ளது. சிறைகளில் வாடும் தமிழ் அரசியல் கைதிகள் இனியும் தாமதமின்றி உடனடியாக விடுவிக்கப்பட வேண்டும்"- என ஜனாதிபதி மைத்திரிக்கு கடுந்தொனியிலான அவசரக் கடிதம் ஒன்றை எதிர்க் கட்சித்தலைவர் இரா.சம்பந்தன் அனுப்பி வைத்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

06




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வங்கிக் கொள்ளை:

# துப்பறிய வந்தது தாய்வான் குழு



தாய்வான் வங்கியொன்றின் கணினிக் கட்டமைப்பில் ஊடுருவி 60 மில்லியன் அமெரிக்க டொலர் கொள்ளையிடப்பட்ட சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்துவதற்காக அந்த நாட்டின் அதிகாரிகள் நேற்றிரவு திடீரென இலங்கைக்கு வருகை தந்துள்ளனர்.

தாய்வான் குற்றப் புலனாய்வுப் பணியகத்தைச் சேர்ந்த அதிகாரிகள் இருவரும், வங்கி அதிகாரி ஒருவருமே விசாரணைகளை மேற்கொள்வதற்காக வந்துள்ளதாகவும்,அவர்கள் இலங்கைக் குற்றப் புலனாய்வுப் பிரவினருடன் இணைந்து விசாரணைகளை மேற்கொள்ளவுள்ளதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவன் குணசேகர தெரிவித்தார்.

தாய்வானின் ஃபா ஈஸ்டர்ன் இன்டர்நெஷனல் வங்கியிலிருந்து கொள்ளையிடப்பட்டதாகக் கூறப்படும் பெருந்தொகைப் பணத்தில் 1.3 மில்லியன் அமெரிக்க டொலர் இலங்கையிலுள்ள மூன்று வங்கிக் கணக்குகளில் வைப்பிலிடப்பட்டுள்ளதாக விசாரணைகளில் தெரிய வந்துள்ளது. அத்துடன் கொள்ளையிடப்பட்ட பணம் இலங்கை தவிர, கம்போடியா, அமெரிக்கா ஆகிய நாடுகளிலும் வைப்பிலிடப்பட்டுள்ளதாகத் தாய்வான் அரசாங்கம் அறிவித்துள்ளது.

தமது வங்கிக் கணக்குகளில் ஊடுருவி, கொள்ளையிடப்பட்ட பெருந்தொகைப் பணத்தை மீளப் பெற்றுக்கொண்டுள்ளதாகவும் சுமார் 5 இலட்சம் அமெரிக்க டொலர் வரையில், இழப்பு ஏற்பட்டிருப்பதாகவும் ஃபா ஈஸ்டர்ன் இன்டர்நெஷனல் வங்கி தெரிவித்துள்ளது.

இதேவேளை, இந்தப் பாரிய கொள்ளைச் சம்பவம் தொடர்பில், சர்வதேச குற்றவியல் பொலிஸாரின் உதவியை நாடுவதற்கு தாய்வானின் நிதி முகாமைத்துவ ஆணைக்குழுவும் குற்றப் புலனாய்வுப் பணியகமும் தீர்மானித்துள்ளன.

அத்துடன், தாய்வானின் தகவல் பாதுகாப்புப் பொறிமுறையை உறுதிப்படுத்தி, விரிவான விசாரணைகளை ஆரம்பிக்குமாறு, அந்த நாட்டுப் பிரதமர் லேய் சிங் டே உத்தரவிட்டுள்ளார்.

இதேவேளை, இந்தப் பாரிய கொள்ளைச் சம்பவம் தொடர்பில் லிட்ரோ கேஸ் நிறுவனத்தின் தலைவர் என்.எம்.எஸ். முனசிங்க உள்ளிட்ட இருவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஆ)



# பேஸ்புக் அவதூறு: வவு. ஆசிரியர்கள் பணிப்புறக்கணிப்பு

தமது பாடசாலையைப் பற்றிய அவதூறான தகவல்கள் பேஸ்புக்கில் பரப்பப்பட்டு வருவதைக் கண்டித்து, வவுனியா முஸ்லிம் மகா வித்தியாலய ஆசிரியர்கள் இன்று காலை வகுப்பறைகளுக்குச் செல்ல மறுப்புத் தெரிவித்து, புறக்கணிப்புப் போரில் குதித்தனர்.

இதனையடுத்து, வவுனியா தெற்கு வலயக் கல்விப்பணிப்பாளர் “பேஸ்புக் விவகாரம் தொடர்பில் கூடிய கவனம் எடுத்து மேலதிக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன. எனவே வகுப்புப் புறக்கணிப்பைக் கைவிட்டு ஆசிரியர்கள் வகுப்பறைக்குச் சென்று மாணவர்களுக்கு கற்பித்தல் நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும்” என்று கோரிக்கை விடுத்தார்.

அதனையடுத்து வலயக் கல்விப்பணிப்பாளரின் கருத்துக்கு மதிப்பளித்து ஆசிரியர்கள் வகுப்பறைக்குச் சென்று கற்பித்தல் நடவடிக்கையை மேற்கொண்டனர்.

இதேவேளை பேஸ்புக்கில் குறித்த பாடசாலை பற்றிய அவதூறு பரப்பப்படுவது பற்றி பொலிஸ் தலைமையகத்துக்கு உடனடியாக அறிவிக்கப்பட்டு,சைபர் பிரிவின் உதவியுடன் அவதூறு பரப்பிய நபரைக் கைது செய்ய நடவடிக்கை மேற்கொள்வதாகப் பொலிஸார் வலயக் கல்விப்பணிப்பாளருக்கும், பாடசாலைச் சமூகத்தினருக்கும் வாக்குறுதியளித்துள்ளனர். (ஆ)

## மனநல சிகிச்சை நிலையத்துக்கு அடிக்கல்





சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் மனநல சிகிச்சை நிலையத்துக்கான அடிக்கல் நாட்டும் வைபவம் நேற்று நடைபெற்றது. இந்தக் கட்டடத்துக்கான அடிக்கல்லை யாழ்.மாவட்ட அரச அதிபர் என். வேதநாயகன் நாட்டி வைத்தார்.(ஆ)



## நீதிமன்ற அவமதிப்பு ரஞ்சனுக்கு நோட்டீஸ்

உயர்நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு பிரதியமைச்சர் ரஞ்சன் ராமநாயக்கவுக்கு நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளது.

நீதிமன்றத்தை அவமதித்த விவகாரம் தொடர்பில், மாகல்கந்த சுதந்த தேரர் மற்றும் ஓய்வுபெற்ற விமானப்படை அதிகாரி ஒருவரும் தாக்கல் செய்த மனு மீதான விசாரணையின் போதே, இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கடந்த ஒகஸ்ட் 21ஆம் திகதி ஊடகங்களிடம் கருத்து வெளியிட்ட ரஞ்சன் ராமநாயக்க, “இந்த நாட்டில் பெரும்பாலான சட்டத்தரணிகள் ஊழல்வாதிகள் ”எனக் குறிப்பிட்டிருந்தார். ஆயினும் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் இவ்வாறு கூறியமையானது, மக்களுக்குச் சட்டம் தொடர்பில் இருக்கும் நம்பிக்கையைச் சீர்குலைக்க வாய்ப்புள்ளதாகவும், இதனால், நீதிமன்றத்துக்கு அபகீர்த்தி ஏற்பட்டுள்ளதாகவும் மனுதாரர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இந்த மனுவை ஆராய்ந்த நீதவான்கள், எதிர்வரும் 25 ஆம் திகதி ரஞ்சன் ராமநாயக்க நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டும் என, நோட்டீஸ் அனுப்ப உத்தரவு பிறப்பித்தனர். (ஆ)

# மைத்திரி வருகையால் வீதிக்கு திடீர் விமோசனம்

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனாவின் வருகையால், பலவருடங்களாகப் பராமரிப்பற்ற நிலையில் இருந்த அம்பாள்குள குறுக்கு வீதிகளுக்கு திடீர் விமோசனம் கிடைத்துள்ளது.

கிளிநொச்சி அம்பாள்குளத்தில் 111 மில்லியன் ரூபா செலவில் கடந்த அரசினால் அமைக்கப்பட்டு, நீண்ட காலமாகத் திறந்து வைக்கப்படாதிருந்த விசேட பொருளாதார மத்திய நிலையம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் நாளை மறுதினம் 14 ஆம் திகதி உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட உள்ளது.

இந்த நிலையில் ஜனாதிபதி செல்கின்ற பிரதான பாதைக்கு அருகில் பல ஆண்டுகளாகச் சீரமைக்கப்படாத நிலையில் இருந்த குறுக்கு வீதிகள் அவசர அவசரமாக, கிரவல் இடப்பட்டு தற்காலிகமாகச் செப்பனிடப்பட்டு வருகின்றன.

கடந்த ஆட்சிக் காலங்களிலும் அரச உயர்மட்டத்தினரின் வருகையின் போது அவசர அவசரமாக வீதிகள் செப்பனிடப்படும் மரபு, நல்லாட்சியிலும் தொடர்வதாக மக்கள் தெரிவித்தனர். (ஆ-13)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அப்பிளை வாங்கிய கூகுள்




## போலிச் செய்தியால் பரபரப்பு

“9 பில்லியன் டொலருக்கு அப்பிள் நிறுவனத்தை வாங்குகிறது கூகுள்” என்ற தலைப்புச்செய்தி டவ் ஜோன் ஸின் நிதிநிலைச் செய்திப்பிரிவின் இணையத் தளத்தில் கடந்த செவ் வாய்க்கிழமையன்று திடீரென வெளி யாகி அதிர்வலைகளை ஏற்படுத்தியது. ஆனால், அந்தச் செய்தி அப்பிளின் இணை நிறுவுநர் ஸ்டீவ் ஜொப் ஸின் உயிலில் இருந்து எடுக்கப்பட் டது என்று குறிப்பிடப்பட்டதன் மூலம் அது போலியானது என்பது பின்னர் தெரியவந்தது.
இந்தச் செய்தி பதிப்பிக்கப்பட்ட இரண்டு நிமிடங்களில் நீக்கப்பட்டா லும், அப்பிள் நிறுவனத்தின் பங்குக ளின் மதிப்பு ஏற்றமே கண்டது.
தொழில்நுட்பப் பிரச்சினையின்காரண மாக இந்தச் செய்தி தவறுதலாகத் தமது இணையத்தில் பதிவேற்றப் பட்டுவிட்டதாகவும், எனவே அதைப் புறக்கணித்துவிடுமாறும் டவ் ஜோன்ஸ் நிறுவனம் கூறியுள்ளது.
எதிர்பாராத விதமாக பதிப்பிக்கப் பட்ட இப்போலிச் செய்தியை உண் மையென்று நம்பிய கூகுள் நிறுவ னப் பணியாளார்கள், தமது பின்னூ ட்டங்களில் “அபாரம்” “ உயிருடன் இருக்கும் ஒவ்வொருவருக்கும் இது ஆச்சரியமான செய்தி” என்று தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்தி இருந் தனர். பின்னரே அவர்களுக்கும் அந்தச் செய்தி பொய் என்று தெரிய வந்தது. (இ)

## தாய்லாந்து மன்னருக்கு

# ஓராண்டுக்குப் பின்னர் இறுதிச் சடங்கு




மறைந்த தாய்லாந்து மன்னர் பூமி பால் அதுல்யதேஜ்ஜின் இறுதிச்சடங் குக்காக பிரமாண்ட ஏற்பாடுகள் முழு வீச்சில் நடைபெற்று வருகின் றன. தாய்லாந்து மன்னராக கடந்த 70 ஆண்டுகளாக ஆட்சி செலுத்திய பூமிபால், தனது 88 ஆவது வயதில் கடந்த ஆண்டு ஒக்ரோபர் 13 ஆம் திகதி உயிரிழந்தார்.
இதனையடுத்து மக்களும், உலகத் தலைவர்களும் அஞ்சலி செலுத்தும் வகையில் கடந்த ஓராண்டாக அவ ரது உடல் அரண்மனை மண்டபத் தில் வைக்கப்பட்டிருந்தது.
இதைத்தொடர்ந்து மன்னர் குடும்பத் தின் பாரம்பரிய முறைப்படி மிகுந்த ஆடம்பரமான முறையில் அவரது இறுதி சடங்கு வரும் 25ஆம் திகதி நடைபெற உள்ளதாக அறிவித்துள் ளனர்.இந்து மற்றும் பௌத்த மத முறைப்படி நடக்கவுள்ள இறுதிச் சடங்குகளுக்கான ஏற்பாடுகள் முழு வீச்சில் நடைபெற்று வருகின் றன.இந்த நிகழ்ச்சியில் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த தலைவர்கள், பொதுமக்கள் என லட்சக்கணக் கானோர் பங்கேற்பார்கள் என எதிர் பார்க்கப்படுகிறது. (இ)

# பேரிடி!

## வடகொரியாவுக்கு கொடுத்தது ஐ.நா.




வடகொரியாவின் 4 வர்த்தகக் கப்பல்க ளும் உலக நாடுகளின் எந்த துறைமுகத் துக்கும் செல்லக் கூடாது என்று ஐ.நா. பாதுகாப்புச் சபை புதிய தடையை விதித்துள்ளது.
ஐ.நா. பாதுகாப்புச் சபை விதித்த பல வேறு பொருளாதாரத் தடைகளையும் மீறி தொடர்ந்து வடகொரியா அணு ஆயுதச் சோதனையில் ஈடுபட்டு வருகின்றது.
கடந்த மாதம் கண்டம் விட்டுக் கண்டம் பாய்ந்து சென்று இலக்கைத் தாக்கி அழிக் கும் அதி நவீன ஏவுகணைச் சோதனை யையும் வெற்றிகரமாக நடத்தியது.
இதற்கு அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் கடும் கண்டனம் தெரிவித்தன.
வடகொரியா மீது மிகக் கடுமையான தடைகளை விதிக்கவேண்டும் எனவும் அமெரிக்கா வற்புறுத்தியது.
இந்த நிலையில் ஐ.நா. பாதுகாப்புச் சபை வடகொரியா மீது புதியதொரு தடையை நேற்று விதித்தது.
வடகொரியாவின் பெட்ரெல் 8, ஹாவோ பான் 6, டோங் சான் 2, ஜி சுன் ஆகிய 4 வர்த்தகக் கப்பல்களும் உலக நாடுகளின் எந்தத் துறைமுகத்துக்கும் செல்லக் கூடாது என்று ஐ.நா. உத்தரவிட்டுள்ளது.
இதன் மூலம் வடகொரியாவுக்கு மறைமுகமாக ஆதரவு அளிக்கும் சீனா போன்ற நாடுகளின் துறைமுகங்களில் இந்த 4 கப்பல்களையும் நிறுத்த முடி யாத நிலை ஏற்பட்டுள்ளது.
ஐ.நாவின் விதிமுறை மீறியதற்காக குறிப்பிட்ட ஒரு நாட்டின் கப்பல்களை உலக நாடுகளின் துறைமுகங்களுக்குச் செல்ல தடை விதிக்கப்பட்டு இருப்பது இதுவே முதல் முறை என்று ஐ.நா. பாது காப்புச் சபையின் ஒருங்கிணைப்பாளர் ஹூயூஜ் கிரிபித்ஸ் தெரிவித்தார். (இ)



# ஏ.ரி.எம். கோளாறினால் ரஷ்ய இளைஞர் யாசகம்

காஞ்சிபுரத்தில் உள்ள ஒரு கோயி லில் யாசகம் வேண்டி நின்ற ரஷ்ய இளைஞருக்கு உதவிக்கரம் நீட்டி யுள்ளார் இந்திய வெளியுறவு அமைச்சர் சுஷ்மா ஸ்வராஜ்.
ரஷ்யாவிலிருந்து இந்தியாவைச் சுற்றிப்பார்க்க வந்த இளைஞரான இவாஞ்சலின் (வயது- 24) தனது ஏ.ரி.எம். அட்டையின் கடவுச் சொல்லில் ஏற்பட்ட கோளாறு காரணமாக கையில் காசின்றி பரிதவித்தார். வேறுவழியின்றி அவர் காஞ்சிபுரம் கோயில் வாச லில் அமர்ந்து யாசகம் மூலம் உணவுக்காக பணம் சேகரிக்க முற்பட்டார். அவரிடம் சட்ட பூர்வமான விசா, பாஸ்போட் என்பனவும் இருந்தன. இது குறித்த செய்திகள் ஊடகங்களில் வெளியா னதையடுத்து, அதனை அதிகாரி கள் வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா ஸ்வராஜின் கவனத்துக் குக் கொண்டு சென்றனர். உடன டியாக இவாஞ்சிலினிக்கு உதவ நடவடிக்கை எடுக்கும்படி அவர் அதிகாரிகளுக்குப் பணித்தார்.
அத்துடன் தனது ருவிட்டர் பக்கத்தில் அமைச்சர் சுஷ்மா ஸ்வராஜ், “இவாஞ்சலின். உங்க ளது நாடான ரஷ்யா எங்களு டைய பழம்பெரும் நட்பு நாடு. சென்னையில் உள்ள எனது துறை சார் அதிகாரிகள் உங்களுக்கு உதவுவர்” எனக் குறிப்பிட்டார்.
தற்போது குறித்த ரஷ்ய இளை ஞரான இவாஞ்சிலின் தனது வங்கியில் இருந்து பணத்தைப் பெறுவதற்கான வழிவகைகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட் டுள்ளன. (இ)

# ஸ்பெய்னுக்கு ஆதரவு

## ஐரோப்பிய ஒன்றியம் அறிவிப்பு

ஸ்பெய்னில் தேசிய ஒற்று மையை ஏற்படுத்துவதற் குத் தாம் ஆதரவளிப்பதாக ஐரோப்பிய ஒன்றியத்தின் உப தலைவர் வல்டிஸ் டொம்ப்ரொவ்கிஸ் தெரி வித்துள்ளார்.
ஸ்பெய்னோடு இணைந் திருந்த கதலோனியா தனி நாடாக மாறுவதற்கான வாக்கெடுப்பில் வெற்றி பெற்றுள்ளது. இதனால் ஸ்பெய்னில் தேசிய ஒற் றுமை சீர்குலையும் நிலை ஏற்பட்டுள்ளது.
இது குறித்து ஐரோப்பிய ஒன்றியத்தின் சார்பில் அதன் உப தலைவர் தெரிவிக்கை யில், ‘ஸ்பெய்னின் தற் போதைய நிலைமையை ஐரோப்பிய ஒன்றியம் மிகவும் கூர்ந்து கவனித்து வருகின்றது. அத்துடன், ஸ்பெய்னின் அரசியல மைப்பை நாம் மதிக்கின் றோம்.எனவே, ஸ்பெய் னில் ஏற்பட்டுள்ள பிரச்சினை யைத் தீர்த்து அங்கு ஒற்று மையை ஏற்படுத்துவதற்கு நாம் பக்கபலமாக இருப் போம்’ எனக் கூறியுள்ளார்.
ஸ்பெய்னிலிருந்து கதலோ னியா சுதந்திரம் பெற்று தனி நாடாகும் ஒப்பந்தத்தில் கதலோனியத் தலைவர் கார்லெஸ் புகிடமொன்ட் மற்றும் ஏனைய அதிகாரிக ளும் ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டுள்ளனர்.
இருப்பினும், ஸ்பெய்ன் அரசாங்கத்துடன் பேச்சு நடத்தும்வரை சில வாரங் களுக்கு இதை அமுல்படுத் துவதை நிறுத்திவைப்ப தாக கதலோனியத் தலை வர் அறிவித்துள்ளார்.
இதனையடுத்தே, ஐரோப் பிய ஒன்றியத்தின் இந்தக் கருத்து வெளிவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.(இ)







# சுறாவைக் காத்த மங்கை

நீச்சல் குளத்தில் சிக்கிய சுறா மீன் ஒன்றை ஆஸ்திரேலி யப் பெண் ஒருவர் காப்பாற்றியுள்ளார்.
ஆஸ்திரேலியாவின் சிட்னிக் கடற்கரையோடு இணைத்து உருவாக்கப்பட்டிருந்த நீச்சல் குளத் தில் மெலிசா என்ற பெண், தனது தாயாரோடு இணைந்து நீச்சலடித்துக் கொண்டிருந்தார்.
அப்போது அந்த நீச்சல் குளத்தில் சுறா மீன்களின் வால்கள் தென்பட்டதை மெலிசாவின் தாயார் கண்டு, அலறினார். ஏனெனில் சுறா மீன்கள் மனிதர் களை வேட்டையாடும் குணம் கொண்டவை.
தாயார் அலறிக் கொண்டு ஓடினாலும், மெலிசா அச்சமின்றி அந்த சுறாமீனை நெருங்கிய போது, அது நீச்சல்குளத்தில் சிக்கிக் கொண்டு தவிப்பதைக் கண்டார். உடனேயே அந்தச் சுறா மீனை விடுவித்து, அதனைக் கடலுக்குள் விட் டார். இந்தக் காட்சியைக் கரையில் நின்றவர்கள் வீடியோ எடுத்து, இணையத்தில் பதிவேற்றியுமுள்ளா னர். இதனால் மெலிசாவின் துணிச்சலை ஆஸ்திரேலிய ஊடகங்கள் பாராட்டி வருகின்றன.
“அந்தச் சுறா மீனை நான் இறுகப் பிடித்து காப்பாற் றிய போது, என்னைத் தாக்க அதுவும் முயலவில்லை. ஒரு குழந்தையைப் போலவே அது என்னிடம் நடந்து கொண்டது” என்று மெலிசா தெரிவித்துள் ளார்.பெரிய அலைகளின் காரணமாக, கடலில் இருந்த அந்தச் சுறா மீன், பக்கத்தில் இருந்த நீச்சல்குளத்தினுள் விழுந்து இருக்கலாம் எனச் சந்தேகிக்கும் மெலிசா, கடலினுள் விட்ட பிறகு அது வேகமாக நீந்தி சென்றது என்றார். (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீபாவளிக்கு வருமா 'மெர்சல்'?



தமிழகத்தில் கேளிக்கை வரிக்கு எதிர்ப்புத் தெரிவித்து புதிய படங்கள் வெளியிடுவது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளமையால் தீபாவளிக்காகத் தயாராகியிருக்கும் படங்கள் வெளியாகுமா? என்று ரசிகர்கள் மத்தியில் குழப்பம் நிலவுகிறது.

தமிழில் வெளியாகும் புதிய படங்களுக்கு அரசு 30 சதவீதம் கேளிக்கை வரி விதித்தது. பட அதிபர்கள், திரையரங்க உரிமையாளர்களின் எதிர்ப்பால் அது 10 சதவீதமாகக் குறைக்கப்பட்டது.

இதையும் திரையுலகினர் கண்டித்துக் கேளிக்கை வரியை முழுமையாக ரத்துச் செய்ய வேண்டும் என வலியுறுத்தி புதிய படங்களை வெளியிடுவதை நிறுத்தியுள்ளனர்.

கடந்த வாரம் வெள்ளிக்கிழமை திரைக்கு வருவதாக இருந்த 7 படங்கள் தள்ளி வைக்கப்பட்டன.

இந்த நிலையில், விஜய் நடித்துள்ள 'மெர்சல்', சசிகுமாரின் 'கொடி வீரன்', பரத் நடித்துள்ள 'பொட்டு' ஆகிய 3 படங்களும் தீபாவளிப் பண்டிகையையொட்டி எதிர்வரும் 18ஆம் திகதி திரைக்கு வரும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.


கேளிக்கை வரியை நீக்குவது குறித்து அரச தரப்பினரும் திரையுலகினரும் பேச்சுகள் நடத்தி வருகிறார்கள். சமரச முயற்சியில் இழுபறி நீடிப்பதால் தீபாவளி படங்கள் வெளிவருவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

## மாயோன் 'மஜிக்'

'மெர்சல்' படத்தில் வரும் மேஜிசியன் விஜய்க்காக ஒரு பிரத்தியேகப் பாடலைக் (மாயோன்) கவிஞர் விவேக் எழுதியுள்ளார்.

இந்தப் பாடலில் மஜிக் உள்ளது என அவர் ஏற்கனவே கூறியிருந்தார். அந்த மஜிக் என்னவென்பதைத் தற்போது வெளியிட்டுள்ளார்.

உலக சாதனை படைத்த டீசர் மற்றும் இணையத்தில் எப்போதும் பிரபலமாகவே இருக்கும் தளபதி ஆகியவற்றைக் குறிக்கும் வகையில் அது அமைந்துள்ளது. (ஒ)




## டிரைலர் எப்போது?



சேதுராமன் இயக்கத்தில் சந்தானம் - வைபவி சாண்டில்யா நடிப்பில் உருவாகி வரும் 'சக்க போடு போடு ராஜா' படத்தின் டிரைலர் குறித்த அறிவிப்பு வெளியாகியிருக்கிறது.

ஏற்கனவே இப்படத்திலிருந்து 'கலக்கு மச்சான்' என்ற பாடல் வெளியாகி வரவேற்பைப் பெற்றுள்ள நிலையில், 'காதல் தேவதை' என்ற வரிகளில் தொடங்கும் அடுத்த சிங்கிள் டிராக் விரைவில் வெளியாகவிருக்கிறது.

இந்தப் படத்தின் இசை வெளியீட்டு விழா நவம்பர் 14ஆம் திகதி பிரமாண்டமாக நடைபெறவுள்ளது.

இந்த நிலையில், படத்தின் டிரைலர் குறித்த அறிவிப்பு ஒன்று வெளியாகியிருக்கிறது. அதன்படி நாளைமறுதினம் (14ஆம் திகதி) வெளியாகவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வி.டி.வி. கணேஷ் தயாரித்து வரும் இந்தப் படத்தை அடுத்த மாதம் வெளியிட படக்குழு முடிவு செய்துள்ளது.

விவேக், சம்பத் ராஜ், ஆர்யன், வி.டி.வி. கணேஷ், ரோபோ ஷங்கர், சஞ்சனா சிங் உள்ளிட்ட பலரும் நடிக்கும் இந்தப் படத்துக்கு நடிகர் சிம்பு இசையமைக்கிறார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஒ)


## பிபா உலகக் கிண்ணம் 2018 தகுதிபெற்ற அணிகள்



2018ஆம் ஆண்டு உலகக் கிண்ண உதைபந்தாட்டத் தொடருக்கு இதுவரை போட்டியை நடத்தும் ரஷ்யா உள்பட 23 நாடுகள் தகுதி பெற்று இருக்கின்றன. இன்னும் 9 அணிகள் தகுதி பெற வேண்டியிருக்கின்றன.

| ஐரோப்பா | தெ.அமெரிக்கா | வ.அமெரிக்கா |
|---|---|---|
| ரஷ்யா | பிரேஸில் | மெக்ஸிக்கோ |
| பிரான்ஸ் | உருகுவேய் | கொஸ்ராரிகா |
| போர்த்துக்கல் | ஆர்ஜென்ரீனா | பனாமா |
| ஜேர்மனி | கொலம்பியா | |
| செர்பியா | | |
| போலாந்து | | |
| இங்கிலாந்து | | |
| ஸ்பெயின் | | |
| பெல்ஜியம் | | |
| அயர்லாந்து | | |

| ஆசியா | ஆபிக்கா |
|---|---|
| ஈரான் | நைஜீரியா |
| தெ.கொரியா | எகிப்து |
| ஜப்பான் | |
| சௌதி அரேபியா | |



# ஓய முடிவு

இந்தியக் கிரிக்கெட் அணியின் முன்னணி வேகப் பந்து வீச்சாளரான ஆஷிஷ் நெஹ்ரா நவம்பர் முதலாம் திகதியுடன் சர்வதேசக் கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெற முடிவு செய்துள்ளார்.

தனது முடிவை அணி நிர்வாகத்துக்கும், பயிற்சியாளர் ரவிசாஸ்திரி, அணித்தலைவர் விராட் கோலி ஆகியோருக்கும் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, அடுத்த ஆண்டு நடைபெறும் ஐ.பி.எல். தொடரிலும் விளையாடப்போவதில்லை என்ற முடிவுக்கு வந்திருக்கிறார்.

38 வயதான நெஹ்ரா, 1999ஆம் ஆண்டு முகமது அசாருதீனின் தலைமையில் அறிமுகமானார். 17 டெஸ்ட்களில் விளையாடி 44 விக்கெட்டுகளையும், 120 ஒரு நாள் போட்டிகளில் விளையாடி 157 விக்கெட்டுகளையும், 26 இருபது-20 போட்டிகளில் விளையாடி 34 விக்கெட்டுகளும் வீழ்த்தியுள்ளார்.

இந்தியாவில் நடைபெறும் ஆஸ்திரேலியவுக்கு எதிரான இருபது-20 தொடருக்கான இந்திய அணியில் நெஹ்ரா இடம்பெற்றிருந்த போதும் முதல் இரு ஆட்டங்களில் அவருக்குக் களம் காண வாய்ப்புக் கிடைக்கவில்லை.

அடுத்து நியூஸிலாந்து அணி இந்தியாவுக்கு வருகை தரவுள்ளது. இந்தியா- நியூஸிலாந்துக்கிடையிலான முதலாவது இருபது-20 போட்டி டில்லி பெரோஸ்ஷா கோட்லா மைதானத்தில் நவம்பர் முதலாம் திகதி நடக்கவுள்ளது.

இதனால், சொந்த ஊர் ரசிகர்களின் முன்னிலையில் விளையாடி விட்டு ஓய்வுபெற வேண்டும் என்பதே நெஹராவின் விருப்பமாகவுள்ளது. (ஐ)

# ஆதிசக்தி, கலைமதி அரையிறுதிக்குத் தகுதி





மணற்காடு சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்டத் தொடரின் அரையிறுதிக்கு நவிண்டில் கலைமதி மற்றும் ஆதிசக்தி விளையாட்டுக் கழகங்கள் தகுதிபெற்றுள்ளன.

சுனாமியால் இறந்தவர்களினதும் கழகத்தின் மறைந்த வீரர்களினதும் நினைவாக மணற்காடு சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழகம் உதைபந்தாட்டத் தொடரை நடத்தி வருகிறது.

இந்தத் தொடரின் இரு காலிறுதியாட்டங்கள் நேற்று நடைபெற்றன.

இதில் முதலில் நடைபெற்ற காலிறுதியாட்டத்தில் ஆதிசக்தி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து அண்ணாசிலையடி விளையாட்டுக் கழகம் மோதியது.

இந்த ஆட்டத்தில் ஆதிசக்தி விளையாட்டுக் கழகம் 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

ஆட்டநாயகனாக ஆதிசக்தி வீரர் கௌரிதரன் தெரிவு செய்யப்பட்டார்.

மற்றொரு காலிறுதியாட்டத்தில் பலாலி விண்மீன் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழகம் மோதியது.

இந்த ஆட்டத்தில் இரு அணிகளும் கோல் போடாமையால் ஆட்டம் சமநிலையை எட்டியது. பின்னர் வழங்கப்பட்ட 'பனால்டி' உதையில் கலைமதி விளையாட்டுக் கழகம் 6:5 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

ஆட்டநாயகனாக கலைமதியின் சந்துரு தெரிவுசெய்யப்பட்டார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# அரசியல் சதியில் மாணவர் இயக்கங்கள்

இலங்கையில் செயற்படும் மாணவர் இயக்கங்கள் அரசியல் சதிகளில் சிக்கியிருப்பதாக சுகாதார போஷாக்கு மற்றும் சுதேச வைத்தியத்துறை அமைச்சர் டொக்டர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.
அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டிலேயே அமைச்சர் இவ்வாறு குற்றஞ்சாட்டினார்.

இது தொடர்பாக அமைச்சர் மேலும் தெரிவிக்கையில் "இந்த இயக்கங்கள் ஜனநாயகம் பற்றி குரல் எழுப்பினாலும், இவை ஏகாதிபத்திய ரீதியில் செயற்படுகின்றன. நல்லாட்சி அரசுக்கு வேண்டுமென்றே சிக்கலை உருவாக்குவதற்காக சில அரசியல் சக்திகளின் சதிக்கு இவையும் துணை போகின்றன.
அதனாலேயே சுமுகமாகத்தீர்க்க வேண்டிய பிரச்சினைகளுக்கு கூட, உடனடியாக ஆர்ப்பாட்டங்களை மேற்கொண்டு அரசுக்கு அவப்பெயரை உண்டாக்க இத்தகைய மாணவர் இயக்கங்கள் முயல்கின்றன" என்றார். (ஆ)

# இன்றைய கருத்தோவியம்




# அதிகாலையில் சூடு: இருவர் உயிரிழப்பு!



சியம்பலாவெவ வனப் பகுதியில் இன்று வியாழக்கிழமை, அதிகாலை இனம் தெரியாத நபர்களால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் இருவர் பலியாயுள்ளனர்.
குறித்த காட்டுப் பகுதியில், சட்டவிரோதமான முறையில் மரம் வெட்டிக்கொண்டிருந்த இருவர் மீதே இந்தத் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்தச் சம்பவத்தில் சியம்பலாவெவ, கருவலகஸ்வெவ பகுதிகளைச் சேர்ந்த 18 மற்றும் 31 வயதுடைய நபர்களே பலியாகியுள்ளனர்.
உயிரிழந்தவர்களின் சடலங்கள் புத்தளம் வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளன. துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்ட நபர்கள் இதுவரை அடையாளம் காணப்படவில்லை எனத் தெரிவித்துள்ள பொலிஸார், இது தொடர்பில் தீவிர விசாரணைகளையும் ஆரம்பித்துள்ளனர். (ஆ)

# நாடு திரும்பினார் பிரதமர் ரணில்



பின்லாந்துக்கு உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்ட பிரதமர் ரணில் விக்கிரமசிங்கசிங்க நாடு திரும்பியுள்ளார். அதிகாலை 1.30 அளவில் பிரதமர் உள்ளிட்ட குழுவினர் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

# மழை தொடரும்



தற்போது நாட்டில் நிலவும் மழையுடன் கூடிய சீரற்ற காலநிலை மேலும் சில தினங்களுக்கு நீடிக்கும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

குறிப்பாக மேல், சப்ரகமுவ, வடமேல், கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களில் 75 தொடக்கம் 100 மில்லிமீற்றர் வரையிலான மழை வீழ்ச்சி ஏற்படும் என்றும், வவுனியா மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களிலும் கடும் மழை பெய்யக்கூடும் என்றும் வளிமண்டலவியல் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.
நாட்டின் ஏனைய சில பகுதிகளில் இடி மின்னலுடன் கூடிய மழை பெய்யக்கூடும். இவ்வாறான சந்தர்ப்பங்களின்போது தற்காலிகமாக பலத்த காற்று வீசக்கூடும் என்றும் திணைக்களம் அறிவித்துள்ளது. (ஆ)

# 2 குழந்தை பெற்றால் நிதியுதவி



மாணவர்களின் எண்ணிக்கை குறைவால் கைவிடப்படும் நிலையில் உள்ள பாடசாலைகளின் எதிர்காலம் கருதி, பிரதேச தமிழ் மக்களின் பிறப்பு வீதத்தை அதிகரிக்க ஐரோப்பா வாழ் தமிழ் மக்கள் நிதியுதவி வழங்கி வருகின்றனர். இதன் முதற் கட்டமாக கடந்த மாதம் மட்டக்களப்பைச் சேர்ந்த 2 குழந்தைகளுக்கு மேல் பெற்றெடுத்த 13 தாய்மாருக்கு தலா 10 ஆயிரம் ரூபா வீதம் வழங்கி வைக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தில் மட்டக்களப்பில் உள்ள நெல்லூர், மணிபுரம், மகிழவட்டுவான் மற்றும் பன்குடாவெளி ஆகிய நான்கு கிராமங்கள் உள்வாங்கப்பட்டு தற்போது மொத்தமாக 37 தாய்மார் உதவி பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஆ)

## மகாராணியின் செய்தியோடு:

# இலங்கை வந்த அஞ்சல் கோல்




2018 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள பொதுநலவாயப் போட்டிகளுக்காக, பிரிட்டன் மகாராணி விடுத்த செய்தியைத் தாங்கிய அஞ்சல் ஓட்டக்கோல், இன்று இலங்கைக்கு கொண்டுவரப்பட்டது.
1930 ஆம் ஆண்டு தொடக்கம் அனுசரிக்கப்படும் பாரம்பரியத்துக்கு அமைய, இந்தக் கோல் பொதுநலவாய அங்கத்துவ நாடுகளுக்கு கொண்டு செல்லப்படுவது வழக்கமாகும். இதன் பிரகாரம் கோலைக் கொண்டுவரும் அதிகாரிகள் இன்று பிற்பகல் 4 மணியளவில் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

இலங்கைக்கான ஆஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் தலைமையிலான குழுவினர், அஞ்சலோட்டக் கோலை வாகன ஊர்தியில் கொழும்புக்குக் கொண்டு வந்து ஜனாதிபதியிடம் கையளித்தார்கள். இந்தக் கோல் வெள்ளிக்கிழமை விசேட ரயிலில் காலிக்கு எடுத்துச் செல்லப்படும். சனிக்கிழமை கொழும்பு ரோயல் கல்லூரியில் பொது மக்கள் பார்வைக்காக வைக்கப்படும் என தேசிய ஒலிம்பிக் சங்கம் தெரிவித்துள்ளது.

பொதுநலவாயப் போட்டிகள் ஆஸ்திரேலியாவில் 2018ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஆ)

# ஓட மறுத்த ரயில்கள்: பயணிகள் அவதி





ரயில் சாரதிகள், உதவியாளர்களை பணிக்கு இணைத்துக் கொள்ளும் நடைமுறையில் திருத்தங்கள் மேற்கொள்ளாமைக்கு எதிர்ப்பு தெரிவித்து ரயில் இயந்திர சாரதிகள் சங்கம் மற்றும் ரயில் கட்டுப்பாட்டாளர்கள் சங்கம் ஆகியன இணைந்து நேற்றிரவு முதல் திடீர் பணிநிறுத்த போராட்டத்தை ஆரம்பித்துள்ளன.
இதனால் மலையகத்திலும், தலைநகர் கொழும்பிலும் காலை வேளையில் பணிகளுக்குச் செல்பவர்கள், பாடசாலை மாணவர்கள் எனப் பெருந்திரளான பயணிகள் சிரமத்துக்குள்ளாகியுள்ளதோடு, பஸ்களிலேயே தமது பயணங்களை மேற்கொண்டனர்.
எனினும் முடிந்தவரை ரயில் போக்குவரத்து நடவடிக்கையை முன்னெடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அரசு அறிவித்துள்ளது. (ஆ)

## நாளை நாளும் கோளும்

13.10.2017 வெள்ளிக்கிழமை ஏவிளம்பி வருடம் புரட்டாதி மாதம் 27 ஆம் நாள்

பிரதமை மு.இ. 11.21 வரை | ரேவதி மு.இ. 09.23 வரை | அமிர்தயோகம்

இராகுகாலம் 10.32 - 12.02 | சுபநேரம் 06.02 - 07.32 | எமகண்டம் 03.02 - 04.32

| மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் | சிம்மம் | கன்னி | துலாம் | விருச்சிகம் | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| பெருமை | மேன்மை | குழப்பம் | ஆதாயம் | அமைதி | இன்பம் | நிறைவு | ஈகை | உயர்வு | பொறுமை | தேர்ச்சி | விவேகம் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிரொலி
Ethiroli

## அந்த நாள் ஞாபகம்.....!





## 1986.10.12

மன்னார் அடம்பனில் விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தியதில் முதன் முதலாக சிங்கள இராணுவத்தினர் சிறைப்பிடிக்கப்பட்டனர். இந்தத் தாக்குதலில் புலிகளின் தளபதிகளில் ஒருவரான லெப்.கேணல் விக்டர் கொல்லப்பட்டார்.

# இறுதிப்போர் எச்சங்கள்: ஐ.நா. பிரதிநிதி பார்வை

முள்ளிவாய்க்காலில் இறுதிப் போரின் எச்சங்களையும், நினைவிடங்களையும் முல்லைத்தீவுக்கு இன்று விஜயம் செய்த, ஐ.நா. சபையின் இடைக்கால நீதி தொடர்பான விசேடபிரதிநிதி பப்லோ டி கிரிப் பார்வையிட்டுள்ளார். முள்ளிவாய்க்காலில் கிழக்கு சின்னப்பர் தேவாலய வளாகத்தில் யுத்தத்தினால் கொல்லப்பட்ட பொதுமக்களின் நினைவாக பதிக்கப்பட்ட நினைவுக்கற்களை பார்வையிட்ட பப்லோ டி கிரிப், குறித்த நினைவாலயம் தொடர்பில் சிவில் சமூகச் செயற்பாட்டாளர் அருட்தந்தை எழில்ராஜனிடம் கலந்துரையாடினார். இதேவேளை, காணாமற்போனோரின் உறவினர்கள் அவ்விடத்தில் வைத்து பப்லோ டி கிரிப்பிடம் மகஜர்களைக் கையளித்தனர். இறுதிப் போரின் போது ஏற்பட்ட அழிவுகள் மற்றும் இலங்கை அடைந்துள்ள முன்னேற்றங்களை ஆராய்வதற்காக ஐ.நா. சபையின் விசேட அறிக்கையாளர் பப்லோ டி கிரிப் இலங்கைக்கு விஜயம் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)



## நுணாவில் இளைஞர்களுக்கு இன்றுகாலை வாள்வெட்டு!

யாழ். சாவகச்சேரி நுணாவில் பகுதியில் இரு இளைஞர்கள் மீது இன்று காலை சரமாரியாக வாள்வெட்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. வாள்வெட்டுக்கு இலக்கான இரு இளைஞர்களும் படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். மோட்டார் சைக்கிளில் வந்த அடையாளம் தெரியாத இருவர் குறித்த வாள்வெட்டுத் தாக்குதலை நடத்தி விட்டுத் தப்பிச் சென்றுள்ளனர். சம்பவத்துக்கான காரணம் இதுவரை தெரியவரவில்லை. மேற்படி வாள்வெட்டுச் சம்பவம் தொடர்பாக சாவகச்சேரிபொலிஸார்விசாரணைகளைஆரம்பித்துள்ளனர்.

# மைத்திரியைச் சந்திக்கக் காத்திருக்கும் கூட்டமைப்பு

அநுராதபுரம் சிறைச்சாலையில் மூன்று தமிழ் அரசியல் கைதிகள் தொடர் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் நிலையில், அவர்களின் கோரிக்கை தொடர்பில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் நேரில் பேசுவதற்கு எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்கள் அனுமதி கோரியுள்ளனர்.

எனினும், ஜனாதிபதி செயலகத்திலிருந்து சந்திப்புக்குரிய அழைப்பு இதுவரை வரவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது. மேலும், உண்ணாவிரதக் கைதிகளுக்கு அரசு உடனடியாக உரிய பதிலை வழங்க வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கடந்த திங்கட்கிழமை நாடாளுமன்றத்தில் கோரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### வடக்கில் நாளை...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

விடுதலை செய்யுமாறு வலியுறுத்தியும் இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்கும் வகையில் தமிழ் பொது அமைப்புகளால் வட மாகாணம் தழுவிய கடையடைப்புக்கு நாளை வெள்ளிக்கிழமை அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இதற்கு பல்வேறு அரசியல் கட்சிகளும், வணிகர் கழகமும், தனியார் பஸ் உரிமையாளர் சங்கங்களும் ஏற்கனவே தமது முழுமையான ஆதரவை தெரிவித்திருந்தன. இந்த நிலையில் யாழ்.பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம், இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம், வடமாகாண அழகக சம்மேளனம் போன்ற அமைப்புகளும் தமது முழுமையான ஆதரவை வெளியிட்டுள்ளன.

இந்த நிலையில் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலைக்கும், நீதிக்குமாக அரசுக்கு அழுத்தம் கொடுக்க இந்தக் கடையடைப்பை வெற்றிபெறச் செய்ய ஒவ்வொரு தமிழரும் ஆதரவு தரவேண்டும் என தமிழ் மக்கள் பேரவையும், ஏனைய பொது அமைப்புகளும் கேட்டுள்ளன.

சகல பொது அமைப்புகளும் இந்தக் கடையடைப்புக்கு ஆதரவு தெரிவித்துள்ளதால் வடக்கு மாகாணத்தில் உள்ள சகல பாடசாலைகள், அரச திணைக்களங்கள், தனியார் நிறுவனங்கள் என்பவற்றில் செயற்பாடுகள் முடங்குவதோடு, போக்குவரத்தும் ஸ்தம்பிதமடையும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (அ)

### அரசியல் கைதிகளை..

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள, நீண்டகாலமாகத் தமது விடுவிப்பைக் கோரிவரும் கைதிகள் சார்பாக தங்களுக்கு பின்வரும் விடயங்களைத் தெரிவிக்க விரும்புகின்றேன்.

★ பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள இந்தக் கைதிகள், தண்டனை விதிக்கப்பட்டவர்களாகவோ, குற்றஞ்சாட்டப்பட்டவர்களாகவோ அல்லது இன்னமும் குற்றச்சாட்டுக்கள் வழங்கப்படாதவர்களாகவோ இருந்தாலும் அவர்கள் அனைவரும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழேயே கைது செய்யப்பட்டார்கள் என்பதுடன், அவர்களுக்கு எதிரான சகல நடவடிக்கைகளும் அந்தச் சட்டத்தின் கீழேயே மேற்கொள்ளப்பட்டன.

★ இந்தப் பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் கொடூரமான, வெறுக்கத்தக்க ஒரு சட்டம் என்பதும் அது காலத்துக்குப் பொருத்தமற்றதென்பதும் இலங்கை அரசினால் உள்நாட்டிலும் சர்வதேச ரீதியிலும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இந்தச் சட்டத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக உள்நாட்டு மற்றும் சர்வதேச நியமங்களுக்கு ஏற்புடைய வகையில் புதிய சட்டமொன்றை உருவாக்கப் போவதாக உள்நாட்டிலும் சர்வதேச மட்டத்திலும் அரசாங்கம் உறுதி வழங்கியிருந்தது.

★ இந்த உறுதியளிக்கப்பட்ட கடப்பாட்டை இலங்கை அரசு இன்னமும் நிறைவேற்றவில்லை. ஆனாலும், இதன் மூலம் குறித்த சட்டம், சட்டப் புத்தகங்களில் தொடர்ந்திருக்க மாட்டாதென்ற இலங்கை அரசின் உறுதியளிக்கப்பட்ட கடப்பாட்டிலிருந்து தவற முடியாது.

★ இந்த நபர்களில் அனேகமானவர்களுக்கு எதிராக இருக்கும் ஒரேயொரு சான்று அவர்களின் விருப்பத்துக்கு மாறாகப் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் பெறப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்குமூலம் மட்டுமே என்பதோடு, அது சாதாரண மான நீதிமன்றத்தில் அவர்களுக்கு எதிரான சாட்சியமாக ஏற்கப்பட மாட்டாது. இதனால் வழக்குத் தொடுநர்களிடம் போதிய சாட்சியங்கள் இல்லாமை காரணமாக அனேக வழக்குகள் ஒத்திவைக்கப்பட்டு வருகின்றன.

★ அனேகமாக இவர்கள் எல்லோருமே அவர்கள் கைது செய்யப்பட்டவுடன் குற்றத் தீர்ப்பு வழங்கப்பட்டிருந்தால் சிறைவாசம் அனுபவிக்க வேண்டிய காலத்தைப் போன்ற நீண்ட காலத்திற்குத் தடுப்புக்காவல் கைதிகளாகவே இருக்கின்றனர்.

★ தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள இவர்களின் குடும்பங்கள் அவர்களின் உழைப்பாளிகளின் ஆதரவு இல்லாமல், நீண்டகாலமாக வேதனையில் வாடுகின்றன. மிகவும் காத்திரமான இம் முக்கிய விடயத்துக்கு இதுவரை கவனம் செலுத்தப்படவில்லை.

★ பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் தீய அம்சங்களுக்கும் புறம்பாக, மக்கள் விடுதலை முன்னணியினர் (ஜே.வி.பி) கிளர்ச்சிகளை மேற்கொண்ட வேளையில் கைது செய்யப்பட்டவர்கள் யாவரும் மன்னிப்பளிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டனர். இதேபோன்ற ஒரு கொள்கையை தற்போதுள்ள இந்தக் கைதிகள் விடயத்திலும் செயற்படுத்த முடியாமலிருப்பது ஏன் என்பதை விளங்கிக் கொள்ள முடியாதுள்ளது.

★ இந்த வழக்குகள் முழுமையாகச் சட்டமா அதிபர் திணைக்களத்தின் பொறுப்பில் உள்ளவையென்பதாகக் கருத முடியாது. அரசின் முதன்மைச் சட்ட ஆலோசகர் என்ற வகையில் சட்டமா அதிபருக்குரிய கௌரவத்தை வழங்கும் அதேவேளை, இவ்வழக்குகள் அரசியல் அடையாளங்களையும் கொண்டிருப்பதனால் இவை முழுமையாகச் சட்டம் சம்பந்தப்பட்டவையென்று கருதிவிட முடியாது. இலங்கையின் தேசியப் பிரச்சினைக்கு உரிய நேரத்தில் தீர்வு காணப்பட்டிருந்தால், கைதிகளாக உள்ளவர்களில் அனேகமானவர்களுக்கு தற்போது ஏற்பட்டுள்ள நிலைமை ஏற்பட்டிருக்க மாட்டாதென்பதும் அவர்கள் பயனுள்ள பிரஜைகளாக இருந்திருப்பார்கள் என்று கூறுவதில் நியாயமிருப்பதைத் தெரிவிக்க முடியும். இத்தகைய சூழ்நிலையில், தாங்கள் இந்த விடயத்தை அரசியல் ரீதியாகவும் நோக்க வேண்டிய கடப்பாட்டை உருவாக்கியுள்ளது. இந்த விடயம் அரசியல் ரீதியாகக் கையாளப்படாமலிருப்பது இன இணக்கத்தை ஏற்படுத்துவதிலும், நன்மதிப்பையும் அமைதி நிலைமையையும் மீள ஏற்படுத்துவதிலும் வலுவான தடையாகவே அமையும்.

★ சில வழக்குகள் வவுனியாவில் இருந்து அனுராதபுரத்திற்கு இடமாற்றப்பட்டதன் மூலம் சில தேவையற்ற முரண்பாடுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. சாட்சிகளுக்குப் பாதுகாப்பு அவசியமாயின் வழக்குகளை இடமாற்றம் செய்யாமல், சாட்சிகளுக்கான பாதுகாப்புக்களை வழங்கியிருக்க முடியும்.

இந்தக் கைதிகள் மேலும் தாமதமின்றி விடுவிக்கப்பட வேண்டுமென நான் வலுவான கோரிக்கையை விடுக்கின்றேன்.

- என்றுள்ளது. இதன் பிரதிகள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, நீதியமைச்சர் தலதா அத்துக் கோரள, சட்டமா அதிபர் ஆகியோருக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.(அ)

### 6631...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

தம்மைப் பதிவு செய்துகொள்ளாதவர்களைக் கைது செய்ய பாதுகாப்பு அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

அதன்பிரகாரம், இராணுவத்திலிருந்து தப்பிச் சென்ற 5 ஆயிரத்து 425 பேரும், கடற்படையிலிருந்து தப்பிச் சென்ற ஆயிரத்து 64 பேரும் விமானப் படையிலிருந்து தப்பிச் சென்ற 142 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் மீதான சட்ட நடவடிக்கைகள் தொடர்பில் ஆராய்ந்து வருவதாக இராணுவப் பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார். (அ)

### மானிப்பாய்...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

யாழ்ப்பாணம் மானிப்பாயைப் பூர்வீகமாகக் கொண்ட சமந்தா ரட்ணத்தின் பெற்றோர் எழுபதுகளில் இலங்கையிலிருந்து புலம்பெயர்ந்து லண்டனுக்கு சென்றவர்கள். இவர்கள் மானிப்பாயில் எழுபதுகளில் பல கட்டுமானங்களை ஏற்படுத்திய மேதர் குடும்ப வம்சாவழியினர் ஆவர்.

பின்னர் எண்பதுகளில் ஆஸ்திரேலியாவுக்கு குடிபெயர்ந்திருந்தார்கள். லண்டனில் பிறந்த சமந்தா ரட்ணம் ஆஸ்திரேலியாவுக்கு வந்த பின்னர் மெல்பேர்னில் கல்வி கற்றவர். மெல்பேர்ன் பல்கலைக்கழகத்தில் முதுகலைமாணி பட்டப்படிப்பை நிறைவு செய்தவர்.

கல்வி கற்கும்போது அந்தக் காலப் பகுதியில் ஆஸ்திரேலியாவுக்கு வருகை தந்துகொண்டிருந்த தஞ்சக்கோரிக்கையாளர்கள் குறித்த விடயங்களில் அதிக கரிசனை கொண்டவராக பல அமைப்புக்களில் இணைந்து சமூக சேவைகளில் ஈடுபட்டார். ஆஸ்திரேலியாவின் வலது - இடது சாரி தரப்பினரின் மக்களுக்கு எதிரான கொள்கைகளை கடுமையாக விமர்சித்தார். தனது அரசியல் நிலைப்பாட்டுக்கு நெருக்கமான கிறீன் கட்சியுடன் இணைந்து செயற்பட்டார். ஆஸ்திரேலிய அகதிகள் நல அமைப்பிலும் முக்கிய பொறுப்பு வகித்தார். 2015 ஆம் ஆண்டு மெல்பேர்னின் வடக்கு பகுதியிலுள்ள மோர்லண்ட் நகர கவுன்ஸில் தலைமை பொறுப்புக்கு கிறீன் கட்சி சார்பில் போட்டியிட்டு வெற்றிபெற்றார். அதன் பின்னர் நாடாளுமன்ற தேர்தலிலும் போட்டியிட்டிருந்தார். வெற்றி பெறவில்லை. ஆனால்பெருந்தொகையான வாக்குகளை பெற்றிருந்தார்.

இன்று கிறீன் கட்சியின் விக்டோரிய தலைமை பதவிக்கு அவரது பெயர் அறிவிக்கப்பட்ட பின்னர் ஊடகங்கள் மத்தியில் பேசிய சமந்தா ஆஸ்திரேலிய அரசியலில் தானும் தனது கட்சியினரும் இணைந்து மிகப்பெரிய மாற்றங்களை ஏற்படுத்துவதற்கு ஆவலாக உள்ளதாக கூறினார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை சிவஞானம் ஜெயானந்தனால் பருத்தித்துறை வீதி, 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில் 12.10.2017 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.